4 ஏப்ரல் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH ஆண்டவர் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்



**மாதாந்திர கருப்பொருள்:**
**எதிர்நோக்கில் உயிர்ப்பு**

# அல்லேலூயா!
## ஆண்டவர் உயிர்த்து விட்டார்!

**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம் என அனைவரும் பாடுவோம்.**

இந்த பாஸ்கா செய்தியை இதற்கு முன் எத்தனையோ முறை நாம் கேட்டிருப்போம். நமக்கு ஞாபகப்படுத்த வேண்டுமா? ஆம்! நாம் கிறிஸ்துவின் உண்மையான நம்பிக்கையாளர்கள், ஆயினும் இன்னும் மந்தமாகவே இருக்கிறோம். நம்மால் ஒன்றும் செய்வதற்கில்லை. அது நமது மனித இயல்பு. நமக்கு வசதியான நிலையையே நாடுகிறோம். சிக்கல், சிரமங்களை எதிர்நோக்கும் போது பயந்து, அவநம்பிக்கை கொள்கிறோம்.

இன்று நாம் மீண்டும் வலியுறுத்தப்படுகிறோம், அஞ்ச வேண்டாம். இயேசு நம்மைச் சந்திப்பார். நமக்கு முன்னே சென்று, நமக்காகக் காத்திருக்கிறார். நமது வாழ்க்கை சூழலில் நம்மை அவர் காண்பார். அவர் மீது நம்பிக்கை கொள்வதற்காக தடைக்கற்களை அனைத்தையும் அவர் அகற்றி விடுவார். உண்மையில் அவர் நம்மை அன்பு செய்து, நமக்காக பலியானார். நமது மனதில் ஏற்படும் ஐயங்களைப் போக்கிடுவார். கிறிஸ்துவை நம்புகிறேன் என நமது திருமுழுக்கு வாக்குறுதிகளை உண்மையாகவே மீண்டும் கூறும் போது அவரது பெயரால் நமது பாவங்கள் மன்னிப்புப் பெறுகின்றன. அவர், வாழ்வோருக்கும் மரித்தோருக்கும் நடுவராக வருவார்.

ஆனால் அவர் வரும்போது, நாம் அவரை அடையாளம் கொள்ள முடியுமா? மரியாவும் திருத்தூதர்களும் அவரை அடையாளம் காண முடியவில்லை! துயரத்தால் செய்வதென்னவென்று அறியாது, அச்சத்தில் அவர்கள் மூழ்கியிருந்தனர். உலகில் வாழ்ந்த அவரது தோற்ற நினைவுகளை மட்டுமே அவர்கள் கொண்டிருந்தனர். ஆனால், உயிர்த்தெழுந்த பின், பாவத்தின் மீதும் மரணத்தின் மீது வெற்றிக் கொண்ட ஆன்மீக உருமாற்றம் கண்ட உடலில் இயேசு தோன்றினார். அவர் மீண்டும் வரும் போது, மகிமையில் அவரோடு நாமும் தோன்றுவோம்.

காலஞ்சென்ற திருத்தந்தை, புனித 2ம் ஜோன் போல் கூறியதை “அவநம்பிக்கையில் துவண்டு விடாதீர்கள். நாம் பாஸ்கா மக்கள், அல்லேலுயா நமது பாடல்.”

இதுவே தகுந்த காலம். இயேசு ஆண்டவர், அவரது வெற்றியில் நமக்கும் பங்குண்டு என்பதில் துணிவு கொண்டு, நமது ஆண்டவரின் உயிர்ப்பை உளமாரக் கொண்டாடுவோம், நன்றி செலுத்துவோம். அவர் நமது இதயத்திலும் மூச்சிலும் செயலிலும் வாழ்கிறார். அவர் நமது ஆண்டவர், நமது மீட்பர் என்பதை உலகிற்கு அறிவிப்போம். அகமகிழ்வோம், ஆண்டவர் நமது அரசர்!

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

“நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்”

(கொலோ.3:1)

**இன்றைய வாசகங்கள்:**

திப. 10:34, 37-43;
திபா.117: 1-2, 16-17, 22-23;
கொலோ. 3: 1-4 / 1கொரி.5: 6-8;
யோவான் 20: 1-9 / மாற்கு 16: 1-7



*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org